# முத்தமிழ் கலசம்

ISSN 2719 - 2520

இருமாதத்திற்கொருமுறை

ஜூலை - ஆகஸ்ட் 2023

ஆண்டு 4 ▲ இதழ் 01

விலை : 200 / -



# திருமணமே, திருநாளே வருக

பங்குனியில் கல்யாணம் பண்பாடே மேளதாளம்
கொங்கு மண்டலம் கோவையிலே சாப்பாடு
சங்கநாதம் முழங்க சதிராட்டம் கோலாகலம்
தங்கிய இன்பம் தரணியிலே மறக்கவில்லையே

அறுசுவை உணவு நாவிலே தங்கியதனாலே
குறுநில மன்னர்களாய் கோலோச்சிய தருணம்
சிறுமைகள் மனதிலிருந்து தூரமாய் ஓடியதே
முறுவல் முகங்களே எங்கெங்கும் காட்சியாகிறதே

பட்டாடை பட்டு வேட்டிகள் சரசரக்கின்றன
மட்டில்லா மகிழ்ச்சியில் சிரிப்பு முகங்களே
அட்டியில்லா ஆனந்தம் அலை பாய்கின்றதே
கொட்டி முழக்கும் சங்கீத சாகரங்களாலே

ஊர்க்கதைகள் உதிரிக் கதைகளென எங்கும்
ஆர்வமாய் மனிதர்கள் அளவளாவும் ஆனந்தம்
தேர்வலமாய் மெல்ல நடந்திடும் பெண்களென
பார் போற்றும் திருமண ஏற்பாடுகளாலே

மொய் வைத்திட வேகவேகமாய் வரிசையிலே
மெய் உண்ட களைப்பிலே கெஞ்சுகின்றதே
தொய்ந்து நடந்து மேடையில் ஏறிநின்றதுமே
பொய்த் தூக்கம் பறந்தோடிட கொண்டாட்டமே

பரிசுப் பொருட்கள் கொடுத்த கையோடு
உரிய பணிகள் முடிந்துவிட்டதென புறப்பாடு
அரிய வாய்ப்பின் இறுதி விடைபெறுதலாய்
பெரிய கைகுலுக்கல் சிரிப்புடன் சென்றனரே

ஒருநாள் கூத்தில் கிடைத்த மகிழ்ச்சியாலே
வருநாள் விருந்துகள் எங்கெங்கே எனத்தேடியே
திருநாள் வருமளவு காத்திருக்க நினைத்தனரே
பெருநாள் அதுவும் வந்திடாதோ ஏங்கினரே

கவிஞர் புல்லாங்குழலன்

# இரங்கல்



அண்மையில் எமைப் பிரிந்த கலைவாதி கலீல் அவர்களின் மறைவு எமது இலக்கிய உலகுக்குப் பேரிழப்பாகும். இவரின் பிரிவால் வாடும் அன்னாரின் குடும்பத்துக்கு முத்தமிழ் கலசம் சார்பாக எமது இரங்கல்களைத் தெரிவிப்பதோடு, அவரை எல்லாம் வல்ல இறைவன் மேலான சுவர்க்கமாகிய 'ஜென்னத்துல் ஃபிர்தௌஸில் பொருந்திக் கொள்வானாக என்று பிரார்த்திக்கிறோம்.

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

**ஜுலை - ஆகஸ்ட் 2023**

ஆண்டு 4 ▲ இதழ் 01



**ஆசிரியர் : சித்தி வஃபீரா**

editor & publisher : Sithy Wafeera

**சிறப்பாசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**

Hon. editor : Tamilnenjam Amine

**ஆசிரியர் குழு :**

Dr ஜலீலா முஸம்மில்
கமர்ஜான் பீபீ
ஆர்.ஜே. பிரகலாதன்
நிலு டீன்
மின்னத் ஸறா பரூஸ்



படைப்புகளின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.



படைப்புக்கள் அனுப்பவேண்டிய முகவரி:

email :
muththamizh.kalasam@gmail.com

The editor of ''Muththamizh kalasam'',
23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka


*படங்கள் உதவி : மின்னத் ஸறா பரூஸ்*

எழுதுகோலின் கூர்முனை கொண்டு
நல்லவை விதைப்போம். அல்லவை புதைப்போம்

# ஆசிரியர் பக்கம்

*அனைத்து வாசக அன்பர்களுக்கும் அன்பார்ந்த வணக்கம்!*

*உங்களின் ஆதரவு அதிகரித்து வருவதை யிட்டு மகிழ்ச்சி! அந்த மகிழ்ச்சியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளத் தான், எமது வாசகர்களின் சிறந்த மூன்று படைப்புகளுக்கு பரிசில்களும் வழங்கி வருகிறோம்.*

*இந்த இதழ் தொடக்கம், எமது ஆசிரியர் குழுவில் புதியவர்கள் உள்வாங்கப்பட்டி ருக்கிறார்கள் என்பது கூடுதல் மகிழ்ச்சி தரும் விடயமாக இருக்கும். இது எமக்கோர் மைல்கல்லாக அமைந்திருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.*

*இனிவரும் காலங்களிலும் இன்னும் தரமான படைப்புகளுடன், உங்களோடு பயணிக்கக் காத்திருக்கிறோம். உங்கள் காத்திரமான ஆக்கங்களோடு தொடர்ந்து இணைந்திருங்கள்!*

*வாழ்க்கை என்பது கற்றுக்கொள்ளத்தான். நல்லவைகளைக் கற்றுக் கொண்டு, ஏனை யோரும் அவைகளைப் பெற்றுக் கொள்ள வழி செய்வோம். அப்போதுதான் நம் வாழ்க்கையின் அர்த்தம் முழுமையாகும்.*

**- சித்தி வஃபீரா**

ஆசிரியர்

# நிழல் தேடி

நோயென்று வந்திட்டால்
நொடியினில் நான்
குழந்தையாவேன்
மடி சாய்ந்து சுகம் காண
உன் நிழல் தான் கூட இல்லை

எத்தனை கரம்
அணைத்தாலும்
உன்கரத்திற்கீடாகாது.
நித்தமுன் நினைவும் கூட
நெஞ்சை விட்டு நீங்காது

தலைகோதி தோள்சாய
தேடுவது உன் நிழலை
மட்டுமல்ல
அருகினில்அமர்ந்து
என் கரம் பற்றக்கூட
எதுவும் அகப்படவில்லை
உன் அன்பின் நினைவுகளில்
ஆழப் புதைந்து மீண்டெழும்
சக்தியும் எனக்கில்லை.

வழியும் கண்ணீர் வற்றுவதுமில்லை
வலிகளை தாங்கும் சக்தியுமில்லை
நலிந்து வாடும் மனமும் உடலும்
உன் நினைவுடனே
எஞ்சிய நாட்களைக் கடத்துகின்றேன்

எண்ணங்களின் பிடியில்
அகப்பட்ட உன்
நினைவுகள் தருவதோ ஏக்கங்கள்
வதைப்பதும் வாட்டுவதும்
உன் அன்பின் தாக்கங்கள்

லரீபா பதுர்தீன்

# காதலியின் வாசகன்

உன் கவிதைப்புத்தகம்
திறக்கையிலெல்லாம்
கரம் பிடித்து உள்
அழைத்துச்செல்கிறாய்

உனது காதற் சிந்தனைகள்
வழிநெடுக வேரூன்றியிருக்க
ஒவ்வொன்றாக காட்சிகளாகையில்
எழுத்துக்கோர்வையில்

உனது பிம்பங்கள் புலப்படுகின்றன
அடுத்தடுத்த பக்கங்களில் நீயும்
நானும் நெருங்கியிருக்கிறோம்

காதல் கவிதைத் தடங்களில்
என்னின் பிழைகளை
நீ சுட்டுகையில்

அச்சாகப் புலனாகிறது
உன்னின் காதல்

கடைசிப் பக்கத்தில்
நீயும் நானும் ஒருசேர
நிற்கப் பழகுகிறோம்

புத்தகம் மூடியும்
நான் பயணித்துக்
கொண்டிருக்கிறேன்

என் விரல்கோர்த்து
உடன் வருகிறாய் நினைவுகளாய்!

ரகுநாத் வ
மதுரை

# காவியமா? இல்லை ஓவியமா?



கோலமயில் அணைப்பில் கோலமிட்ட நீரோசை
ஆலமர விழுதாய் அவனிவந்த ‘பா‘ரதம்
எண்ணங்களை விதைத்த ஏற்றமிகு கவிஞன்
கண்ணுக்குக் கண்ணான கண்ண தாசனவன்
விண்ணுக்கு விரைந்திட்ட வித்தாரப் புலவன்
திண்ணிய மனத்தின் தீஞ்சுவைத் தமிழன்
சிற்றின்பச் சுவையை செதுக்கிய செம்மறவன்
கற்றதோ கைம்மண்ணளவு கற்றுத்தந்தான் உலகளவு
சொற்போர் செய்த சுகந்த வரிகளில்
சிற்பமாய்ச் சிலையாய் சிந்தினான் முத்துக்களை
மானிட இனத்தின் மாபெரும் கலைஞன்
தேனினுமினிய பாக்களில் தென்றலாய் வீசியவன்
பாமரரும் ரசித்திடப் பாக்களைப் புனைந்து
தாமிர பரணியாய்த் தரணியில் ஓடியவன்
சாமரம் வீசியே சந்தனமாய்க் கமழ்ந்து
காமத்தைக் கனிரசமாய்க் கன்னியரில் உண்டவன்
உணர்வுகளின் புனிதத்தை உயிராக மதித்து
கணப்பொழுதும் வாழ்வியலில் கவிதையாக வாழ்ந்தவன்
பணத்தின் அரங்கினைப் பந்தியிற் கண்டு
பிணமாகும் நிலையினை படம்போட்டுக் காட்டியவன்
அர்த்தமுள்ள இந்துவாய் ஆயிரம் கடமைகள்சொல்லி
சர்ப்ப யாகத்தில் சான்றுகளை எரித்து
சொர்க்க வாசல் செல்லும் தருணம்
கர்த்தரைப் பாடிக் காவியமும் படைத்தானே.

**தமிழ்நெஞ்சம் அமின்**

# வஞ்சனை செய்வாரடி

சுற்றியிருக்கிறார்கள்
சுயநலவாதிகள்

பற்றியிருக்கும் கைகளும்
பற்றியெரிதல்களுடன்

புன்னகைக்குப் பின்னாலே
புண்படுத்தல்கள்

சேர்ந்திருந்தாலும்
சேற்றுப் பூசல்கள்

உடன்வந்த பின்னும்
உட்பகையின் தொடர்ச்சி

தோள் தருகிறேன் என்றவர்
தேளாக நின்றார்

கைகுலுக்கலூடாக
கைகழுவியும் விட்டார்

வழிகாட்டிச் சென்றவர்க்குக்
குழிபறிக்கிறார்

சுமைதாங்கிக்குக்
கதவடைக்கிறார்

நம்பிக்கை ஜோதி
நட்டாற்றில் தவிக்க

துரோகத்திற்கு முடி சூட்டி
ஊர்வலம் போகிறார்

காரியம் சாதிக்கக்
காலோடும் தோளோடுமாகித்
தன்தேவை தீர்ந்துவிட
தந்திரப் பாய்ச்சல்.

அக்கரையைச் சேரும்ரை அவர்
அக்கறைக்குப் பஞ்சமில்லை

அக்கரையில்  சேர்த்துவிட
அகக் கறைகள் காட்சியாகும்

நயவஞ்சக முகங்களின்
மாயவலைக்குள் சிக்கித்
திணறிக் கொண்டிருப்பது
இந்த தேசம் மட்டுமல்ல
மானுட நேசமும்தான்....

**மக்கொனையூராள்**

---

## கிச்சன் டிப்ஸ்

மீன்,கோழியிறைச்சி கழுவும் போது கொஞ்சம் மஞ்சள் தூள்,கொஞ்சம் கோதுமை மா அல்லது 2 மே.க தேங்காய்ப்பாலில் ஊறவைத்து கழுவினால் வாடை இருக்காது.

கிழங்கு,கடலை,பயறுவகைகளை அவிக்கும் போது நாலு பல் பூண்டையும் சேர்த்து அவித்தால் வாயுத் தொல்லை ஏற்படாது.

கருவேப்பிலையை ஒரு சில்வர் தாளில் சுற்றி டப்பாவில் போட்டு ஃப்ரிஜ்ஜில் வைத்தால் நீண்ட நாட்கள் பசுமையாக இருக்கும்.

கத்தியை லேசாக சூடாக்கி பாணை (ப்ரெட்) வெட்டினால் எளிதில் வெட்டலாம்.

எலுமிச்சைத் தோலால் பீங்கான்,டீ கப்கள்,கரண்டி,பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவினால் பளிச்சென இருக்கும்.

சமையல் சோடாவால் ஃப்ரிஜ் உட்பகுதியை துடைத்தால் கறைகள், அழுக்குகள் நீங்குவதுடன் கெட்ட வாடை வராது.

# ஒற்றைப் பனை

## திருமதி. றீற்றா இராசலிங்கம்

இருபது வருடங்களின் பின் போர் தின்ற பூமியில் இடம்பெயர்ந்து வன்னி சென்று மீண்டும் தன் சொந்த மண்ணிற்கு வந்து சேர்கிறார் சோமசுந்தரம். ஊரில் இருக்கும் வேளை சோமு என்றும் சோமண்ணா என்றும் ஊராரால் அறியப் பட்டவர் இன்று தான் நிற்பது அந்த ஊரில் தானா என்றும் தன் வீட்டு முற்றம் தானா இது என்றும் ஏக்கமாய் பார்க்கிறார் அடுத்த காணியையும் அங்கலாய்ப்பாய் பார்க்கிறார் அதற்கு காரணமும் உண்டு அந்த வளவு அவர் தங்கை குடியிருந்த வளவு தாய் தந்தையை தன் பால்ய வயதுகளிலேயே பறிகொடுத்த சோமு தங்கையுடன் தம்பியையும் தன்னுடன் வைத்துப் பராமரித்து வந்தார். இப்போதோ எல்லாம் இழந்து விட்டு சொந்த இடம் மீண்டிருக்கிறார். ஊரை விட்டுப்போகும் போது இவர் வளவில் மட்டும் இருபதிற்கும் அதிகமான வடலிகள். இன்றெல்லாம் அவை ஓங்கி வளர்ந்திருக்கும் என்று உற்சாகமாய் வந்தவர்க்கு ஏமாற்றமே மிச்சம். எல்லாமே அழிவுற்று இவர்போலே ஒன்று மட்டும் தனிமரமாய் இவர் வளவில் நிற்கிறது. இது அவரின் இளமைக்கால நினைவுகளை அசை போட வைக்கிறது. அழிவின் முன் அது ஒரு அழகிய கிராமம். வயல்கள், குளம், கோவில், கோபுரம் என திரும்பும் இடமெல்லாம் அழகு நிறைந்திருக்கும். மதிப்பு மிக்க குடும்பங்களில் சோமு குடும்பமும் ஒன்று. அப்பா அம்மா சோமுவிற்கு பின் இருவர் அன்னம்மா கோபாலன். எல்லா வளமும் கிடைக்க இயற்கையோடிணைந்து இனிதே இவர்கள் வாழ்க்கையும் இருந்தது. காலமோ வருடங்களை தாண்டி வேகமாய் கடந்துகொண்டிருந்தது. அனர்த்தங்கள் அவ்வப்போது நிகழ்வது தான் ஆனால் எதிர்பார்க்கா நேரத்தில் அது நிகழ்கையில் இழப்புகளோடு சேர்ந்து அடுத்த கட்டம் குறித்து சிந்திக்ககூட வழியில்லா இயலாமை யைத்தருவது பேரவலம் தான் .ஈழப்போரும் அவ்விதமே சோமு குடும்பத்தையும் சிதைத்து விட்டது. ஷெல்லில் அடிபட்டு அப்பாவையும் , அகதி முகாம் வாழ்க்கையில் அம்மாவையும் இழந்த பின்பு

சோமுவிற்கு தன்னம்பிக்கையைச் சொல்லிக் கொடுக்க ஒரு சொந்தம் கூட இல்லை. இருந்தும் தன்னை நம்பும் தன் இரு சகோதரர்க்காய் சாவிலிருந்து மீண்டெழும் வாழ்வினை வாழத்திட்டமிட்டான். ஆரம் பத்தில் கிடைக்கும் வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு வரும் கொஞ்ச வருமானத்தில் தன் வாழ்க்கையைத் தொடங்கிய சோமு வயலையும் செய்தபடி தன் உழைப்பில் ஓர் கடையையும் நடாத்தி வருகிறான். இதற்கிடையிலும் அவன் தன் தங்கை விரும்பியபடியே மணமுடித்து வைத்து அவள் வாழ்க்கையிலும் அண்ணனின் பங்கை இன்றுவரை சரிவர செய்து கொண்டிருக்கிறான். எத்தனை நாள்தான் இங்கிருந்து கஷ்டப்படுவது அண்ணா என்று ஏங்கித்திரிந்த தன் தம்பியையும் சிரமத்தின் மத்தியில் வெளி நாட்டிற்கு அனுப்பி வைத்தான்.


அவன் நிரந்தரமாய் அங்கு தங்கும் வரைக்கும் இவனும் முடிந்தளவு உதவி செய்தான். என்ன இருந்தாலும் சொந்த இடம் தந்து விடும் சந்தோஷத்தை எந்த சொர்க்கமும் தரப்போவதில்லை என்பதை சோமு தான் சந்திக்கும் அனை வரிடமும் எப்போதும் சொல்வான்.

இதில் தன் சொந்த இடத்தைப் பார்க்காமல் போய்விடுவேனோ என்ற ஏக்கமும் கலந்திருக்கும். இன்று அந்த ஏக்கத்திற்கு விடை கிடைத்துவிட்டதாய் சந்தோஷப்பட்டு வந்தவனிற்கு மிஞ்சியது ஏமாற்றமே. சொந்த இடம் மட்டுமே அவன் பார்க்கக்கூடியதாய் இருக்கிறது. சுற்றி எத்தனை சொந்தங்கள் இருந்தார்கள் சோலைகளாய் இருந்த வளவுகள் எல்லாம் பாலைவனங்களாய் மாறிப்போன பரிதாபம் அவன் மனதை இன்னும் அழுத்திச் செல்கிறது. கடந்த காலநினைவுகளிலிருந்து அவரை கந்தசாமியண்ணையின் குரல் நிகழ்காலம் நோக்கி மீட்டது. ‘எடேய் சோமு என்ர பிள்ள செல்வி சொன்னாள், உன்ர தம்பி கோபாலு ரெலிபோன் கதைச்சவனாம் வாற மாசம் உன்ன பார்க்க வாறானாம் குடும்பத்தோட.

உன்னட்ட சொல்லச்சொன்னவன் அதுக்கு தான் நான் வந்தன்‘ என்டார். சந்தோஷத்துடனே சோமுவும் ‘உண்மையோ அண்ணை நல்ல விஷயம் உள்ள வாங்கோவன்‘‘ என்றார். ‘இல்லயப்பு நான் ஒருக்கால் விதானையாரிட்ட போக வேணும்‘ என்றபடி நடக்கத் தொடங்கிவிட்டார். சரியண்ணை என்றபடி சோமுவும் தன் தம்பி வரவை எதிர்பார்த்தவனாக தன் இயலுமைக்குட்பட்டு வளவையும் வீட்டையும்துப்பரவாக்கத்தொடங்கினார். நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. வெளிநாட்டிலிருந்து வந்த கோபாலனும் கொழும்பிலிருந்து ஊர் வரும் செய்தியை செல்வி வந்து சொன்னதும் சோமுவிற்கு இடம் கொள்ளாச் சந்தோஷம். இடுப்பில் துண்டை அவிழ்த்து மறுபடி இறுக்கிக் கட்டிக் கொண்டு தன் பையொன்றை எடுத்தபடி சந்தைக்குப் போய்வர கிளம்பிவிட்டார். நாட்டுக்கோழியும் நல்ல பிஞ்சு கத்தரிக்காயும் சேர்த்துச் செய்து வச்சா சோத்துப்பானைய சும்மா விடமாட்டான் கோபாலன் என்று தங்கையிடம் முன்பு கிண்டலடித்து பேசியதெல்லாம் நினைவில் வரவும் அவரும் சந்தையடிக்கு வந்துவிட்டார். எல்லாம் பார்த்து விலை பேசி வாங்கும் காலம் போய் கேட்டா ஒரே விலை வேற பேச்சே வேண்டாம். நல்லதோ கெட்டதோ விரும்பினா வாங்கு என்ற மனநிலைக்கு பழகிவிட்டோமே என்று நினைத்த படி பொருட்களை வாங்கியபடி வெளியில் வந்து தம்பியண்ணை கடையில் பேப்பரையும் வாங்கிப் பையில் திணித்தபடி வந்து சேர்ந்தார். அவர் வரவும் கோபாலன் வந்திருக்கவும் சரியாகவிருந்தது.

பல வருடங்கள் பிரிந்திருந்த பாசத்தின் சாட்சிகள் ஒருவர் தோளில் மற்றவராய் தங்களை அழுத்திக் கட்டிக் கொண்டனர். அழுது முடித்த பின் தான் சோமு ‘என்னடா கோபாலு குடும்பம் எங்க பிள்ளையள் வாகனத்துக்குள்ளயே‘ என்றபடி எட்டிப்பார்க்கிறார். இடை மறித்த கோபாலன் ‘இல்லையண்ணே அவையள் ஒருத்தரும் இங்க வரேல்லை. இங்க தங்களுக்கு வெயில், தூசி இதுகள் ஒத்துக்கொள்ளாது என்று பயப்பிட்டினம்

நான் விட்டுட்டு வந்தனான்‘ என்று இழுத்தான். ‘ஏனடா‘ என்ற சோமு ‘சரிவிடு‘ என்றபடி தன் ஏமாற்றத்தை தம்பியின் முன் காட்டிக்கொள்ளாமல் ‘அவையள் எல்லோரும் சுகமா இருக்கினம் தானே அது போதும்‘ என்றபடி ‘இரு கதைப்பம் பிறகு உலையைப் போட்டுட்டு வாறன்‘ என்றபடி சமையலறை செல்ல முற்படுகிறார்.



தம்பியோ 'அண்ணை அவ்வளவு நேரம் நான் இருக்கேலாது. இப்ப லீவு இல்ல அண்ணை நான் பிஸினஸ் அலுவலா ரெண்டு நாள் தான் இங்க நிற்கலாம் அதான் உன்ன பார்த்திட்டு திரும்புற வழியில அக்காவையும் பார்த்திட்டு போவம் எண்டு வந்தன்' என்றான். பேச வேறு மறுமொழியின்றியும் பேசியே ஆக வேண்டும் வேறு வழியின்றியும் 'வேறென்ன புதினம்' என்றார் சோமு. 'அங்க புதினம் பெரிசா இல்ல நீயும் அங்க வாவன் அண்ணை இங்க இருந்து என்ன செய்யப்போகிறாய்? நான் போய் எல்லா ஒழுங்கும் செய்யுறன் வாவன்' என்றான் கோபாலன். வெளியில் ஒருமுறை பார்வையை விட்ட சோமு 'வேண்டாம் கோபாலு அது என்னால முடியாது நான் வெளிக்கு போற நினைப்பில இருந்திருந்தா உனக்கு முன்னம் போயிருப்பன். அதுவும் போக, இஞ்ச சொந்த இடத்துக்கு வாறதுக்கு இவ்வளவு கஷ்டப்பட்டிருக்கவும் மாட்டன். எனக்கு எல்லாம் இஞ்ச தான். சாகுற வரைக்கும் நான் அசையமாட்டன். நீயில்ல தங்கச்சியில்ல என்ர சொந்தங்கள் யாரும் பெரிசா இஞ்ச இல்ல எண்டாலும் இறுதி வரைக்கும் இஞ்சையே இருப்பன்' என்று சொல்லிவிட்டுப் பெருமூச்செறிந்தபடி 'நீ வேணுமெண்டால் அன்னம்மாவுக்கு ஏதாவது உதவிசெய்து அவளிண்ட குடும்பத்தின் பாடுகளை பார் கோபாலு' என்றார். தன் தமையனின் தன்னம்பிக்கையையும், பிடிவாதத்தையும் கூடவே இருந்து பார்த்து பழகியவன் கோபாலு என்பதால் அவன் அதன்பின் வேறு எதுவும் சொல்லவில்லை. அண்ணனிடம் விடைபெற்று சென்றான். எல்லாவற்றையும் இழந்து மீளவும் நிலம் திரும்பியபோது தன் சொந்த இடத்தை அடையாளம் காட்ட நின்ற ஒற்றை பனைமரம் போலே சோமுவும் சொந்த இடத்தில் சொந்த உழைப்பின் அடையாளமாய் இன்றும் வாழ்கின்றார்.

# மழையும் நானும்

இறுக்கமான இதயத்தில் கொஞ்சம்
இதமான தென்றல் வீசிடும்!

கடும்கோபம் காற்றில் எங்கோ
மறைந்து மாயம் செய்திடும்!

இயற்கையை ரசிக்க மறந்த மனம்
மழையில் தன்னை மறந்திடும்!

மாலை நேர மழை
என்னுள் மயக்கத்தை ஏற்படுத்தும்!

நினைவுகள் அனைத்தும் நித்திரையில்
நீண்டதூரம் பயணம் செய்திடும்!

அமைதியில் மனம் அழகாகிடும்!
அடிமனதில் உள்ள ஆசைகள்

அந்தி நேர மழையில் நேற்று
நடந்த சோகம் மறதியாகும் !

இன்று பெய்த மழையில்
குதூகலிக்கும் மனம் குழந்தையாகும் !

**க. பூமணி**

# பேரபேதம்

ஒரு முழம் மல்லி இருபது ரூபாயென
சொன்ன முனியம்மாவிடம் ஒரு முழம் மல்லியும்
கொசுறாக இரண்டு ரோஜாக்களும்
வாங்கியதில் பூத்துக் குலுங்கியது மனம்

தள்ளுவண்டியில் காய்கறி விற்கும்
பொன்னம்மாவிடம்
எடைக்கு கூடுதலாகவே காய்கறி எடுத்துப் போட்டு

கறிவேப்பிலை, கொத்தமல்லியை
காசின்றி ஏராளமாக
எடுத்துக் கொண்டதில் ஏக மகிழ்ச்சி

தயிர் விற்கும் தாச்சியம்மாவிடம்
கூடுதலாய் இரண்டு கரண்டி தயிரைக்
கேட்டு வாங்காவிட்டால் தயிரைப் போல்
இறுக்கமாகும் மனசு

பல்பொருள் அங்காடியில்
ஒரு கோப்பைத் தயிரை
எழுபது ரூபாய்க்கும்
பழம் காய்கறிகளுக்கு

எடைக்குக் கூடுதலாக இருக்கும்
ஒவ்வொரு கிராமுக்கும் விலையிடும்போதும்
கைப்பையைக் கட்டணம் செலுத்தி வாங்கும் போதும்

வங்கியட்டையைத் தேய்த்துவிட்டு
வாய்மூடி வருகிறது
எளியவர்களிடம் வாயாடிய வாய்

– பா. சிவகுமார்

# மீளுமா இளையோர் சமூகம்?

## உடுவிலூர் கலா

ஒரு நாட்டின் பொருளாதாரம் இளையோர் கரங்களிலேயே தங்கியுள்ளது. எங்கள் நாடும் இதற்கு விதிவிலக்கல்ல. கடந்த காலங்களில் நாம் இழந்தது ஏராளம் ஏராளம். இன்றும் நம்மை விட்டகலாத துயர்களோடு நடைப்பிணமாகப் பயணிக்கிறோம். நமது நாட்டைப் பொறுத்த வரையில், இளையோரே நாட்டை மீட்டுத் தரவேண்டியவர்கள். இங்கு நடப்ப தென்ன?

தினமும் ஊடகங்களின் பிரதான செய்தி போதை கடத்தல், பாலியல் வன்முறை என்பதே. இதை யார் செய்கிறார்கள்? நம்மவர்களே. இவ்வாறு சுட்டப்படுபவர்கள் ஒவ்வொருவரும் தாயின் கருவறையில் குடியிருந்தவர்களே. எமது பண்பாடும் கலாசாரமும் புனிதம் கொண்டுலவ, பக்தி மொழியென்று எம்மொழி வணங்கப்பட, எம் இளையோரின் அருவருக்கத்தக்க செயல்களால் நாம் கூனிக் குறுகி நிற்கிறோம். போதையின் நெடிய வாசனையோடு எம்சுவாசம். திரும்பும் இடமெங்கும் பலவடிவங்கள் கொண்டு ஆட்சி செய்கிறது போதைப் பொருள்.

எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறது என்று தெரியாமல் திண்டாடுகிறோம். அண்மைக் காலங்களில் இளைஞர்களின் தற்கொலை மரணங்களை தரிசிக்கும் நிலை எங்களுக்கு உருவாகியுள்ளது. தற்கொலையின் பின்னணியை நோக்கின், போதையே அங்கு செல்வாக்குச் செலுத்துவதைக் காண முடியும் .

போதைக்கு அடிமையானவர்களின் நிலையையும் பெற்றோர் நன்கு அவதானிக்கிறார்கள். அவர்கள் இருளையே விரும்புகிறார்கள். தனிமையோடு போராடுகிறார்கள். பார்ப்பவர்கள் தம்மைப் பற்றிக் கதைப்பதாக முடிவு செய்கிறார்கள். நாளாக நாளாக தம்மைத் தாமே தூக்கிட்டும், மின்கம்பங்களில் வாகனங்களை மோதியும் தற்கொலை செய்கிறார்கள்.

வாழவேண்டியவர்கள். இப்படியே அநியாயமாக தொலைகிறார்கள். குற்றவாளிகள் யார்? என்றால், நட்பு வட்டம் என்றும் கைபேசி பாவனை என்றும், மனவிரக்தி என்றும் நோகாமல் பெற்றோர் பதில் சொல்வதைக் காண்கிறோம். உண்மையில் குற்றவாளிகள் பெற்றோரே.

இன்று மாணவ சமூகம் எம்மத்தியில் கேள்விக்குறியாக நிற்கிறது. மாணவ சக்தி மாபெரும் சக்தி மௌனிக்கப்படுகிறது. முறியடிக்கப்படுக்கிறது. பொறுப்புக் கூறுபவர்கள் யார்?

அடுத்தவர்களால் எமது பிள்ளைகள் வாழ்வில், கல்வியில் இவை எப்படிச் சாத்தியமாகின்றன?. சிந்திக்கும் சக்தியுமா இல்லாமல் போய் விட்டது. ஒவ்வொரு பெற்றோரும் கடந்த காலத்தை கொஞ்சம் பின் நோக்கிச் சென்று பார்த்தால், தாய்மையின் வேதனை புரியும். இன்று எங்கே அந்தத் தாய்மை பறிபோனது? எங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்க பெற்றோர் பட்ட அவலம், சொரிந்த கண்ணீர்... இன்று எப்படி அக்கறையீனமாக விட்டார்கள்?, பெற்றோர் என்று தம் பிள்ளைகளை கைநழுவி விட்டார்களோ அன்று வந்தது எமக்கான கேடு.

இன்று போதையின் மிகுதியில் உடன் பிறந்த சகோதரியைத் தெரியாத மயக்கம். எத்தனை பருவப் பெண்கள், அப்பாவிச் சிறுமிகள் ஏன்? பல் விழுந்த பாட்டி கூட பாலியலுக்கு இரையாகி மரணித்த சம்பவங்கள் நிறைய உண்டு.

நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்று வாழ்ந்தவர்கள் நாம். குற்றங்களின் குப்பை மேட்டில் நின்று களிகூருகிறோம். அசிங்கமா யில்லையா? ஒவ்வொரு பெற்றோருக்கும் பிள்ளைகளே உலகம். பிள்ளைகளுக்கு பெற்றோர் உலகம் அல்ல. அவர்கள் உலகம் வேறு. அறிவியல் உலகில் அவர்கள் சஞ்சரிக்கிறார்கள் . வாழ்வியலைக் கூறு போடும் சக்திகள் பல அவர்கள் கண் முன்னே. கண்காணித்து வழிநடத்த வேண்டியது ஒவ்வொரு பெற்றோரின் கடமையாகும்


எந்தப் பிள்ளையும் பெற்றோரிடம் வரம் கேட்டுப் பிறப்பதில்லை. மகிழ்ந்திருந்து பெற்ற பிள்ளைகளை மகிழ்வாக வாழவைக்க வேண்டியது கட்டாயமே. இதை மறந்து அதிவேக உலகில் ஓடிக்கொண்டிருக்கும் பெற்றோர் பிள்ளைகளை நடுத்தெருவில் விட்டதால், இளையோர் வாழ்வியல் பாதாளத்தை நோக்கி அதிவேகமாகப் பயணிக்கிறது. அதீதமாக போதைப் பொருட்களும் எம்முன்னே பரவிக் கிடக்கிறது..

பெற்றோர் நினைத்தால் மட்டுமே எம்சமூகத்தைக் காப்பாற்ற முடியும். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழ்ந்தால், அடுத்த சந்ததியின் மரணத்தை நாமே பார்த்து நீடூழி வாழும் பரிதாப நிலை ஏற்படும். யாராலும் தடுக்க முடியாது.

சிறைக்கம்பிக்குள் இருக்கும் கைதிகளைப் பார்த்தால் 18-30 வயதுக்குள்ளான இளையோரே அதிகம். இவர்கள் எப்போது வெளியே வருவார்கள்? குற்றங்கள் நிவர்த்தி ஆகுமா? எதிர்காலம் எப்படி? என்பனவெல்லாம் சிந்திக்கப் படவேண்டியவைகளே..

திருந்த வேண்டியவர்களும், மாற வேண்டியவர்களும் பெற்றோரே. அடுத்தவரைக் குறை கூறி வாழாது, நம்மை நாமே நிதானித்து நடந்தால், சமூகம் திருந்த வாய்ப்புண்டு. தவறின், எதிர்காலம் பாதாளத்தை நோக்கி வேகமாகத் தள்ளப்படும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. திருந்துவார்களா?

# தன்முனைக் கவிதைகள்



1)
ஆரோக்கிய வாழ்க்கைக்கு
நம்மை நாம் பழக்கிடுவோம்.
இழந்தபின் மீட்பது
அவ்வளவு எளிதல்ல.

2)
நேசிப்பதும் விடுவதும்
உங்கள் விருப்பம்.
கசக்கி எறியாதீர்
சகமனிதனின் மனதை.

3)
நிழல் கொடுத்த ஆலமரம்
எட்டி உதைப்பதில்லை.
இளைப்பாறிய குருவிகள் அங்கு/
எச்சமிட்டுச் சென்றாலும்.

4)
வாழ்வியலின் யதார்த்தத்தை
உணரவைக்கும் தனிமை.
நம்மை நமக்குணர்த்தி
வலுப்படுத்த உதவும்.

5)
வாழ்க்கைப் பாடமது
உணர்த்தி நிற்கிறது.
கற்பதற்கு இன்னும்
நிறையவே உள்ளதென.

6)
வீம்பு செய்வோரைக் கண்டால்
விரைவாக கடந்து செல்க!
வீண்விரயம் ஆகுவது
உங்களது நேரமும் தான்.

7)
சிறுவர்களின் மனங்களிலே
அறநெறியை விதைத்திடுவோம்.
எதிர்கால சமுதாயத்தை
செப்பனிட உதவிடுமே.

சுபாஜினி மனோகரன்
(வன்னியூராள்)
சூரிச், சுவிஸ்

# புரியாத பிரியம் பிரிவில் தான் முடியும்

மீராநகர் ரிப்கா

சோபா ஒரு மாற்றுத்திறனாளி.

வயதோ இருபத்தைந்து. பார்ப்பதற்கு அழகும் பார்வையை கவரும் ஒரு சிரிப்பும் அவளிடம் இருந்தது. பிறப்பில் ஊனமாக பிறந்த அவள் தன் தகப்பனால் கைவிடப்பட்டாள்.

அவளுக்கு பிறப்பிலே பாசத்தை காட்டி வளர்த்த தாயும் மறு மணம் செய்து கொண்டாள்.

பாவம் சோபா தன் பாட்டியிடம் வளர்ந்து வந்தாள். அவளுக்கு சொந்தமும் இல்லை. அவளை சொந்தம் என்று சொல்ல யாருமில்லை.

அவளது விடா முயற்சியினால் ஒரு தனியார் நிறுவனத்தில் சிறிய சம்பளத்துக்கு வேலைக்குச் சேர்ந்தாள்.

காலம் மெல்ல மெல்ல ஓடத்தொடங் கியது.

நிழல் மரத்திற்கும் துணை மரம் இருக்கும் போது சோபாவும் தனக்கு ஒரு துணையை தேடியதில் தப்பே இல்லை. அவளுடன் சிறு வயது நண்பனான சிவா எப்போதுமே அவளுக்கு ஆறுதலாகவும் அன்பாகவும் பழகி வந்தான். காலப் போக்கில் சோபா மனதில் காதல் மணம் வீசத் தொடங்கியது.

ஊனம் என்பது உடலில் தானே உள்ளத்தில் இல்லையே என உறுதியாக இருந்தாள். தன் உள்ளத்தில் சிவா மீது ஏற்பட்ட ஒருதலை காதலை சொல்லாமலே மனதோடு மறைத்துக் கொண்டாள்.சிவாவுக்கோ சோபா மீது இருந்தது பரிதாபமும் பாசமும் சிறுவயது நண்பி என்பதும் தான்.

அவள் காதலோ இன்னும் உறுதியாகியது.

உள்ளத்தினால் அவனுடன் வாழத் தொடங்கினாள் அப்பாவியான சோபா. காலம் அவளுக்கு கருணை காட்டாமலே விட்டு விட்டது. திடிரென நோயுற்ற பாட்டியும் இறந்து விட்டாள்.

இன்னும் மனமுடைந்த அவள் கத்தினாள். கதறினாள்.சாவு வீட்டிக்கு வந்தவர்கள் சமாளித்துக்கொண்டு போய் விட்டார்கள். இவளுக்கு என்ன செய்வது என்று ஏதும் புரிய வில்லை.மனதளவில் ஆறுதலாக சிவா மட்டும் தான் இருந்தான்.

வீட்டிலே யாரும் இல்லாததாலே தன்னை பார்த்துக்கொள்ளவும் யாருமில்லாததாலும் அவள் அங்கவீனம் ஆனவர்களை பராமரிக்கும் இடத்திற்க்கு தன் நண்பன் சிவா உதவியுடன் போய்ச் சேர்ந்தாள்.

மனம் நிறைந்த ஏக்கமும் அவன் மீது இருந்த காதலையும் தற்போது சொல்லக்கூடாது என அவள் மறைத்துக் கொண்டாள்.

கால ஒட்டத்தில் இருவருடங்கள் கழிந்தபின் அவள் சிவாவுக்கு தொலை பேசி அழைப்பு ஏற்படுத்தினாள். அது பயனில்லை அழைப்பில் அவனுடன் பேச முடியவில்லை. மீண்டும் மீண்டும் அழைத்துக்கொண்டு இருந்தாள்.

ஏதோஒருநம்பிக்கைஅவளதுஉள்ளத்தில்

ஊசலாடியது. தனிமை, இழப்பு, ஏமாற்றம் எல்லாமே அவளை கோபப்படுத்தியது. முகத்தை தலையணைக்குள் புதைத்தபடி கத்தினாள்.திடீரென ஒரு நாள் சிவா ஒரு பெண்ணுடன் சோபா இருக்கும் இடத்திற்கு வந்தான். இவ்விருவரையும் கண்ட அவளின் உள்ளம் சுக்கு நூறாக உடைந்தது. கண்ணீரை அடக்கிக் கொண்டு சிவா நான் உனக்கு தொலைபேசியில் அழைத்தேன் உன்னிடம் இருந்து எனக்கு பதில் கிடைக்க வில்லையே என்றாள்.

அதன் பின்னர் சிவா மெதுவாக வாயை திறந்து நான் திருமணம் செய்து கொண்டேன். உன்னிடம் என்னாலே சொல்ல முடியல என கூறி கண்ணீர் வடித்தான். ஏன் சிவா அழுகிறாய் என இவள் கேட்க, அதற்கு அவன் ‘நான் ஒரு விதவைக்கு வாழ்வு கொடுத்தேன். இவள் பெயர் மலர் இவளுடைய கணவன் ஒரு விபத்தில் இறந்து விட்டான் இவள் தனியாக கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். அதனாலே நான் அவளுக்கு வாழ்க்கை கொடுத்தேன்‘ எனக்கூறி முடித்தான்.

சோபா மனதில் நானும் தனியாக இருந்தேன் தானே உனக்கு தோண வில்லையா என மனதிற்குள் பேசிக் கொண்டாள்.

சந்திப்பு முடிந்தது புரியாத பிரியம் பிரிவில் தான் முடியும் என்பதை உணர்ந்த அவள் நான் ஊனமானவள் தானே என எண்ணி கவலை அடைந்து கண்ணீர் வடித்தாள்.

ஊனத்திற்கும் உள்ளத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையே தன் மனதை கல்லாக்கிக் கொண்டாள்.

தன்னைப்போன்ற ஊனமுற்றவர்களுக்காக அவர்களின் உடல் உள நலம் பேணப்படல் வேண்டும். எங்குமே பேசப்படல் வேண்டும் என எண்ணி அதற்காக உழைத்தாள் தன்னையே அதற்காக அர்ப்பணம் செய்தாள்.

உள்ளத்தில் வரும் ஊனம் உடலையே ஊனமாக்கிடும் என்று உணர்ந்த அவள் அதற்கான கற்கை நெறியைப் பூர்த்தி செய்து, உளநல ஆலோசகராக. தன் கடமையைத் தொடர்ந்தாள்.வாழ்க்கையை இப்போதுதான் வாழத் தொடங்கி யுள்ளேன் என்று மகிழ்ந்தாள்

அவள் உள்ளத்தில் அன்று பூத்த காதல் பூ மனதில் உறுதி கொடுத்து, இன்றும் கூட வாசம் வீசுகிறதே அவளுடைய வாழ்வில்.

---

# ஐந்தால் தமிழ்

ஐவகை நிலமும் தமிழால் நிரம்பும் அந்நாளில்
ஐம்புலனும் ஒன்றாய் தமிழால் இணையும் நன்னாளில்

ஐம்பூதமும் ஊசலுற்று தமிழால் அஞ்சும் கண்ணில்
ஐம்பெரும் காப்பியம் தமிழால் நிலைப்பெறும் மண்ணில்

***(கண்ணில் - இடத்தில் - வேற்றுமை உருபு)***

## அறிவிப்பாளினி மதீரா இலங்கை



# ஆளுமை அறிமுகம்

## மதிசுதா

மதிசுதா இலங்கையைச் சேர்ந்த தமிழ் திரைப்பட இயக்குனரும் நடிகரும் ஆவார். குறும்படங்கள், ஆவணத் தயாரிப்புகள் மற்றும் முழுநீளத் திரைப்படங்களையும் இயக்கி யும், நடித்துமுள்ளார்.

வலைத்தள எழுத்தாளராக சிறந்த விமர்சக ஆளுமையோடு சமூகவலைத் தளங்களில் எழுதியும் வருகிறார். அண்மையில் இலங்கையில் 'ஈழத்தின் வெந்து தணிந்தது காடு' எனும் முழு நீளத் திரைப்படத்தையும் தயாரித்து இயக்கியிருந்தார்.

Crowd funding முறையில் மக்களிடமிருந்து சேர்க்கப்பட்ட பணத்தினை முதலீடாக கொண்டு இத்தகைய திரை முயற்சியை அவர் இலங்கையில் வெற்றி கரமாக நிறைவுசெய்ததோடு இத்திரைப் படமானது இலங்கையின் பல இடங்களில் திரையிடப்பட்டு மக்களின் பேரபிமானத்தை பெற்றிருக்கும் அதேவேளை வெளிநாடுகளிலும் திரையிடுவதற்கான முயற்சிகளிலும் வெற்றி கண்டிருக்கிறது.

இவரின் இயற்பெயர் - சுதாகரன்.
தந்தை பெயர் - தில்லையம்பலம்
தாயின் பெயர் - மகேஷ்வரி.

*ஆவணப்பட உருவாக்கத்திற்கான உயர் பட்டயக் கற்கையினை முடித் திருககிறார் 12 குறும்படங்கள், 5 ஆவணப் படங்கள், ஒரு பாடல் என்பவற்றை இயக்கியதுடன் 25 குறும் படத்துக்கு மேல் நடித்தும் உள்ளார்*

*<u>சிறந்த நடிகருக்கான விருது</u>*

• Canadian tamil film festival (தழும்பு) - 2015

• Navalar film festival - france (கருவறைத் தோழன்) - 2016

• Adsaram film festival (போலி) - 2015

• Thrivenor talkies film festival (போலி) - 2015

*<u>சிறந்த இயக்குனர் விருது</u>*

• Balumahendra film festival – 2014 (துலைக்கோ போறியள்)

• Balumahendra film festival - 2015 (தாத்தா)

*<u>சிறந்த திரைக்கதைக்கான விருது</u>*

• vimbam film festival london – 2017 (பாதுகை)

• ilamai fm film festival – 2014 (மிச்சக்காசு)

• AAA international film fesival – 2014 (மிச்சக்காசு)

*<u>சிறந்த கலை இயக்குனர்</u>*

• Navalar film festival - france (கருவறைத் தோழன்)

*<u>சிறப்பு நடுவர் விருது</u>*

• London international film festival (2015) (தாத்தா)

• Olikkeetru festival france (2014) (சுவர் தேடும் சித்திரம் பாடல்)

*<u>சிறந்த படத்துக்கான விருது</u>*

• Balumahendra film festival – 2015 (தாத்தா)

• Vimbam festival london – 2016 (பந்து)

*<u>சிறந்த இயக்குனர்</u>*

1) உருவாட்டி






சிறந்த அசல் திரைக்கதை

2) ஆபர் சர்வதேச திரைப்பட விழா பிரான்ஸ்
(Auber International Film Festival france)

சிறந்த எழுத்தாளர்

3) புத்த சர்வதேச திரைப்பட விழா
(BUDDHA International Film Festival)
4) Golden leaf
5) உருவாட்டி

சிறந்த தயாரிப்பாளர்

6) Golden leaf
7) உருவாட்டி

Best Subject

8) Cinemaking film festival

Best Future film

9) OSTIA INTERNATIONAL FILM FESTIVAL Italy

Semi Finalist

10) Alternative Film Festival Toronto, Ontario

Best Actress

11) andaman nicobar
12) MANILA INDEPENDENT FILM FESTIVAL PHILIPPINES

Best All Category

13) BIRSAMUNDA INTERNATIONAL FILM

14) CUCKOO INTERNATIONAL kerala

சிறந்த வெளிநாட்டுத் திரைப்படம் (Best Foreign Film)

15) golden sparrow
16) Hodu International film festival

அறிமுகப்படம் (Debut Film)

17) Golden sparrow
18) Hodu International film festival

சிறந்த ஆசியத் திரைப்படம் (Best Asian Film)

20) மருதம் (Marudam)

சிறப்புக் குறிப்பு (Special Mention)

21) Nepal cultural film festival
22) Madras Independent
23) CepteFest İstanbul
24) SF3 Smartphone film festival Australia
25) DMViFF Film festival california

Best Poster

26) Uruvatti
27) Shiny Sparkle Independent Online Film Festival (SSIOFF)

சிறந்த இசை (Best Music)

28) ANGKOR WAT INDEPENDENT FILM FESTIVAL
29) Indo Thai Film Festival

சிறந்த ஒளிப்பதிவு (Best cinematography)

30) MALACCA INTERNATIONAL FILM FESTIVAL

உத்தியோகப்பூர்வ தேர்வுகள் (Official selection)

31) Cinemaking International Film Festival BANGLADESH
32) Do It Zero - A Zero Budget Production Film Festival UK
33) SIERRA INTERNATIONAL FILM
34) Hamburg Film Awards Germany - 2022
35) Ceylon International Film Festival USA
36) Black Cat Award International Film Festival

(இவை ஈழத்தின் வெந்து தணிந்தது காடு திரைப்படம் கைக்கொண்ட விருதுகள்)

என வரிசையாய் நம் ஆளுமை கைக்கொண்ட வெற்றி விருதுகளை பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம். சிறந்த படைப்புகளால் எம் தாய்நாட்டுக்கே பெருமை தேடித் தந்து கொண்டிருக்கும் இவரை முத்தமிழ் கலசம் சார்பாக நாமும் வாழ்த்துகிறோம்.






- பொன்னாங்கண்ணிக் கீரையைத் துவட்டல் செய்து சாப்பிட்டு வந்தால், மூல நோய் தணியும். இந்தக் கீரையின் தைலத்தை தலைக்குத் தேய்த்துக் குளித்து வந்தால்... கண் நோய்கள் நெருங்காது.

- சமையலுக்குக் கைக்குத்தல் அரிசியைப் பயன்படுத்துவது மிக மிக நல்லது. கைக்குத்தல் அரிசியில் நார்ச் சத்துக்கள் நிறைந்துள்ளன.

- சைக்கிள் கேப்பில் எல்லாம் ஸ்நாக்ஸ் சாப்பிடுவதை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். அதற்குப் பதிலாக தானியங்கள், முளை கட்டிய பயறு போன்றவற்றைச் சாப்பிடலாம்.

- பப்பாளிப் பழங்கள் மிகவும் சத்து மிகுந்தவை. வாரம் ஒருமுறை பப்பாளிப் பழம் வாங்கிச் சாப்பிடுங்கள். கண்களுக்கும் நல்லது.

- அதிக நாட்கள் உணவை ஃப்ரிட்ஜில் வைத்து சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். அப்படி வைக்கப்பட்ட உணவுகளில் சத்துக்கள் குறைந்து விடுவதோடு, உடல் ஆரோக்கியத்துக்கும் தீங்கினை ஏற்படுத்தும்.

- தினசரி சிறு துண்டு அன்னாசியை தேனில் ஊற வைத்து, அந்தத் தேனை இரண்டு வாரம் சாப்பிட்டால் கல்லீரல் ஆரோக்கியமாக இருக்கும்.

- பலமான விருந்து காரணமாக ஜீரணக் கோளாறா? புதினா, தேன், எலுமிச்சைச் சாறு... இவற்றில் ஒவ்வொரு ஸ்பூன் கலந்து சாப்பிட்டால் போதும்.

- கேன்சர் செல்களைத் தகர்க்கும் சக்தி திராட்சையின் தோலில் இருக்கிறது. திராட்சை கொட்டைகளிலிருந்து பெறப்படும் மருந்துப் பொருட்கள், வைரஸ் எதிர்ப்புச் சக்தியை பெரிதும் தூண்டுகின்றன. மருந்தே வேண்டாம்...!

- இயற்கைச் சூழலான இடங்களுக்குச் செல்ல நேர்ந்தால்... கொஞ்ச நேரம் ஆழமாக மூச்சு விடுங்கள். நுரையீரலுக்கு அது மிகவும் பயனளிக்கும்.

- எந்தவித நோய் தாக்கியிருந்தாலும் முதலில் செய்ய வேண்டியது, கவலையைத் தூக்கி எறிவதுதான். அது தான் முதலுதவிக்கும் முந்தைய சிகிச்சை.

- சர்க்கரையை (சீனி) உங்கள் வாழ்க்கையிலிருந்து ஒழிக்க முடிந்தால், உடலின் எதிர்ப்புச் சக்தியை எளிதில் வலுப்படுத்தலாம்.

- உடம்பைக் குறைக்க ஒரே வழி உணவுக் கட்டுப்பாடும், நடைப் பயிற்சியும் தான். காந்தப்படுக்கை, பெல்ட், மாத்திரை போன்றவை உரிய பலனை தராது.

- பீட்டா காரோட்டீன்ஸ் அதிகமுள்ள உணவுகளை உண்பது இதயத்துக்கு நல்லது. குறிப்பாக கேரட், முட்டை

கோஸ், சர்க்கரைவள்ளிக் கிழங்கு, அடர் பச்சைநிற கீரைகள் போன்றவை.

- நீங்கள் அடிக்கடி நீச்சல் அடிப்பவர் என்றால்... இதயத்தைப் பற்றி கவலையேபட தேவையில்லை.

- உப்பு, இதயத்துக்கு எதிரானது. உப்பு போட்ட கடலையைக் கொறிக்கும்போதெல்லாம், இதயம் பாதிக்கப்படுவதாக உணருங்கள்.

- மன அழுத்தம் இதயத்தின் எதிரி. அதை விட்டுத் தள்ளுங்கள்.

- உங்கள் குடும்பத்தில் யாருக்காவது இதய நோய்கள் இருந்தால், உங்கள் இதயத்தை மருத்துவர் மூலம் சோதிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

- கிட்னியில் கல் இருக்கிறதா? சாப் பாட்டில் மெக்னீசியம் சேருங்கள். நிறைய பீன்ஸ் சாப்பிட்டாலே போதும்! கோதுமை, ஓட்ஸ், பாதாம், முந்திரி, மீன், பார்லி போன்றவையெல்லாம் மெக்னீசியம் அதிகம் உள்ள சில உணவுகள்.

- சிப்ஸ், கோக், இனிப்புள்ள பாட்டில் ஜூஸ்கள், சீனி - இவையெல்லாம் கிட்னியில் கல்லை உருவாக்கும் வில்லன்கள்... உஷார்!

- நிறைய தண்ணீர் குடிப்பது, சிறுசிறு கிட்னி கற்களை அகற்ற உதவும். கூடவே கேரட், திராட்சை மற்றும் ஆரஞ்சு ஜூஸ் என்று ஏதாவது ஒன்றைக் குடிப்பது மிகவும் நல்லது.

- காய்கறிகளை நிறைய சாப்பிடுபவர் களுக்கு, 'கிட்னியில் கல்' என்ற பயமே தேவையில்லை.

- பல்லில் வலி, ஈறுகளில் வீக்கம், வாயின் வெளிப்புறத்தில் வீக்கம், பல் கறுப்பு நிறமாக மாறுவது, பல்லில் குழி ஏற்பட்டு உணவு தங்குவது, குளிர்ந்த மற்றும் சூடான உணவு உட்கொள்ளும்போது கூச்சம் ஏற்படுவது போன்றவை பல் சொத்தை ஏற்படுவதற்கான அறிகுறிகள்.

- பற்களில் ஏற்படும் பாதிப்பு, தொண் டைக்குப் பரவி, சமயங்களில் இதயத்தையும் பாதிக்கும். எனவே, பற்களை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

- தேநீர், காபி போன்றவற்றை அடிக் கடி குடிப்பது பற்களுக்கு நீங்களே வேட்டு வைப்பதற்குச் சமம். மிகவும் குளிர்ந்த நீரைக் குடிப்பதைத் தவிருங்கள்.

- சூடான உணவை சாப்பிட்ட நொடியே, ஜில்லான உணவுக்கு மாறினால், உடலுக்கும் பல்லுக்கும் பாதிப்புகள் ஏற்படும்.

- இனிப்புச் சாப்பிடுபவர்களுக்குப் பல் சொத்தை ஏற்பட வாய்ப்பிருக்கிறது. எனவே, எது சாப்பிட்டாலும் வாய் கொப்பளிக்க வேண்டும்.


- அக்கி (herpes zoster) எனப்படும் முகத்தில் தோன்றும் கட்டிகளுக்கு மண் பூசும் வழக்கமிருக்கிறது. அக்கி, ஒருவித வைரசுக்கிருமித் தொற்றுமூலம் ஏற்படக்கூடியது. அதற்கான மருந்துகளைப் பயன் படுத்துவதே நல்லது.

Dr **ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர், இலங்கை


# றோணியோக்களின் வளர்ச்சி-10



இலக்கிய மேம்பாட்டுக்கு வித்தாக றோணியோக்கள் பரிணமித்தன என்பது நிதர்சனமான உண்மை. தானும் உயர்ந்து மற்றவர்களையும் எழுதத் தூண்டிய அன்றைய நல்லுள்ளங்களின் பொன்னான காலம் றோணியோக் காலம் என்றால் மிகையாகாது. இன்று நினைத்தாலும் உள்ளம்




● சப்தம் பற்றிய சங்கதி



பூரிக்கின்றது. மகிழ்வு மனதை நெகிழ வைக்கிறது.அந்த வகையில் இன்று எனது ஆய்வுக்குள் உலாவரும் றோணியோ 'சப்தம்' ஆகும்.இது 1988/02 அன்று முதலாவது இதழை மாதாந்த இதழாக

பிரசவித்துள்ளது. இலக்கியச்சோலையின் இதய மலர்கள் என்ற முதல் வசனத்தோடு ஆரம்பமாகின்றது.

இதன் ஆசிரியர்கள் எஸ்.யூ.கமர்ஜான்பீபீ. இணைஆசிரியர் நஸ்ரினாத் தாஹிர் ஆகியோர் ஆவார்கள்.





இதன் முகவரி--
The Editor
"Sabtham"
1132,Dalupitiya road,
Hunupitiya, wattala

வாருங்கள் வாசிப்போம்!
சப்தத்தின் சப்தம்-ஆசிரியர்
ஏனிந்த அவலம் - மருதூர் ஜமால்தீன் ,
மூன்று ஹைக்கூ கவிதைகள் - ஏ.அஸீஸ் நிஸாருத்தீன், சரித்திர நாவல் பற்றி - காண்டீபன், மேமன் கவியின் ஏழு கவிதைகள், செம்பகத்தூரான் முஸம்மில்- விஞ்ஞானம், புதியதோர் உலகம் செய்வோம் - பாத்திமா நளீரா, வடுக்கள் - செஞ்சுடர், தொடராதே! எஸ்.யூ.கமர்ஜான்பீபீ,

## இரண்டாவது சப்தம்

புரட்சி வித்துக்களுக்கு இது தண்ணீர் ஊற்று... என்ற அழகிய கோஷத்தோடு ஆசிரியர் கருத்து, சுவாசத்தெருவில் நிந்தமணாளன், இராவணனை நேசித்து - செல்வி மஸூரா ஏ.மஜீட்,, வடுக்கள் தொடர் - செஞ்சுடர் அவங்க வார - ஏ.எல்.எம்.நஸீர் நேரம் பார்க்கும் இரவுகள் -





கமர்ஜான்பீபீ, இசைவதை நிறுத்து! - இக்பால் அலி, புதைக்குழி விசாரணைகள் - என்.ஏ.தீரன். சொன்னவை - மைந்தன், அபூதாரிக்,தீரன், கடிதம்-மருதூர் ஏ.ஹசன், வானம் அழும் - வாழைச்சேனை அமர்,

## சப்தம் - 3

'யதார்த்த வித்துக்களுக்களுக்கு இது பாத்தி கட்டும்' என்ற கோஷத்தோடு ஆரம்பிக்கும் சப்தத்தில் சப்தம்... ஆசிரியர், இலக்கியத்தின் மண்கள் - மருதூர் ஜமால்தீன், சப்தம் பற்றிய சப்தங்கள்., சின்ன இதயத்தின் ஆவேச வரிகள் - ரீ.எல்.ஜப்பர்கான், வடுக்கள் தொடர்... அதுபிழையென்றால் இதுவும் பிழையே!, ஈழத்து முஸ்லீம்கள் - கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், வெற்றி இல்லை - எஸ்.யூ.கமர்ஜான்பீபீ,. சோகத்தோடு - வாழைச்சேனை அமர், அனுதினம் - புதுநகரான், வேஷங்களை கலையுங்கள் - கலையழகி வரதராணி,. வறுமையின் ஆற்றல் - கல்வியூர் விஜயபாரதி , பிரார்த்தனை -ஆயிஷா முஹம்மது, . பரிதவிப்பு! - கவியுதயன் எம்.ஏ.அன்வர் அலி, உங்களில் யாராவது... - நிதானிதாசன், நாட்டுப் பாடல் அல்லது நாட்டுப்பாடல் -எம் முஹம்மட் நகீபு.

## சப்தம் - 04
## மே - ஜூன்

'யதார்த்த வித்துக்களுக்கு இது பாத்தி கட்டும்' சப்தத்தில் சப்தம் ஆசிரியர். பேட்டிகொடுக்கும் பேட்டிகள்...- செல்வி:நஸ்ரிநாஸ் தாஹிர்., துணிந்து நடக்கிறான். - வாழைச்சேனை அமர்., எழுத்தும் அதன் போக்கும் - கண்ணோட்டம். எம்.எம்.எம்.நூறுல்ஹக், வடுக்கள் - செஞ்சுடர், யார் பிச்சைக்காரர்கள் ? - அக்கரையூர் எம்.ஏ.அன்வர்அலி விழித்துவிட்டோம் - எஸ்.யூ.கமர்ஜான்பீபீ, அவர்களும் நாங்களும் - மைந்தன்.

## சப்தம் - 05
## ஜூலை ஆகஸ்ட்

சப்தத்தில் சப்தம், ஒரு வரலாற்றின் முன்னுரை - மாளிகையஸ்ஹர்,, ஒரு பலஸ்தீனம் காதல் - சவுதியிலிருந்து: தாஹிர் எஃப் அஸ்லம், உங்களால் முடியாது - நிள்கரை நங்கை, இதயங்கள் அழுகின்றன!, - நஸீமா. ஏ.மஜீத், எழுத்தும் அதன் போக்கும் - எம்.எம்.எம் .நூறுல்ஹக், ஆளுமைக்குள்ளே - எஸ்.யூ.கமர்ஜான்பீபீ, இலக்கியத் திரட்டுக்கள்-மெய்யொளி, புதுயுகம் தோன்றிட வேண்டும் - கல்வியூர் விஜயசாந்தி, அந்தச் சப்தம் - செல்வி நஸ்ரின் நாஸ் தாஹிர், அதோ கதிதான்! பாடிஸ்டா ஜூனைட், அன்னையின் புலம்பல்...-

*கலையழகி வரதராணி, எழுந்து வருகிறீர்களா - நிதானிதாஸன் ,*

***சப்தம் - 06***
***செப்டம்பர் - ஒக்டோபர்***

*சப்தத்தில் சப்தம் . மீட்சி எப்போதோ? ஆசிரியர், ஜாஹில்களுக்கு.-மருதூர் ஜமால்தீன், சிறையில் என் சின்ன நாடு - யாத்திரிகன், கலவரமழை - கதிர்.எஸ்.ஹமீட், உங்களுடன் கொஞ்சம் - ஆசிரியர் - (சென்ற இதழ் தொடர்). ஒரு பலஸ்தீனம் காதல் - தாஹிர் எஃப்.அஸ்லம்., இனி ஒரு குர்பானுக்காக... - ரஸ்ஸாக் எம்.இம்தியாஸ், நீயும் பௌர்ணமியோ...? - வாழைச்சேனை அமர், நாளைக்கு கணிதப் பாடம் (சிறுகதை) ஜாபி, கேளுங்கள்.. - சம்மாந்துறை நிஸாம் ஏ.மஜீட், வீரமுழக்கம் - எஸ்.யூ.கமர்ஜான்பீபீ. முஸ்லிம் கட்சிகளும் முஸ்லிம் சமுகமும்... எம்.எம்.எம்.நூறுல்ஹக், ஒரு பகலின் ஆர்ப்பாட்ட ஊர்வலம்... !ஏ.எம்.எம். நஸீர்., இன்றைய தேசியகீதம் - ஹஸீனா. ஆறு இதழோடு சப்தத்தின் சப்தம் நிசப்தமாகி விட்டது. வளர்ந்த எழுத்தாளர்களைக் கொண்டு ஆக்கப்பட்ட சப்தம் இன்று உங்கள் பார்வைக்காக. அன்றைய நினைவுகளை மீட்டிப் பார்த்தோம். இன்ஷாஅல்லாஹ் மீண்டும் ஒரு றோணியோவுடன். சந்திக்கும் வரை நான்*

எஸ்.யூ.கமர்ஜான் பீபீ(J.P)
வத்தளை S L PC



# புத்தொளி வாழ்நெறி

இரண்டாம் தொடர்...

ஒ

×××

1. ஒட்பம் விருத்தி செய்.
(அறிவு)
2. ஒட்டுறவு சிதையேல்.
3. ஒப்பான் உறவு பேண்.
(ஒழுக்கமான இயல்புகளை உடையவன்)
4. ஒருமுகம் தவறேல்.
(நேர்வழி)
5. ஒப்பந்தம் மீறேல்.

ஓ

××××

1. ஓம்படை மதித்திடு.
(மதநூல் போதிக்கும் இடம்)
2. ஓர்மம் தளரேல்.
(மன உறுதி)
3. ஓர்வம் நீக்கு.
(பாரபட்சம்)

ஔ

××××

1. ஔவை சொற்பேண்.
(தாய்)
2. ஔவை நோன்பு வை.
(செவ்வாய் விரதம்)

மணிக்கூ கவி கலாநிதி ஹாஜியானி

**செய்னுலாப்தீன் நஸீரா.**

ஏறாவூர், இலங்கை.

# கவியும் நானும்

கவியும் நானும் தமிழுடன் தவழ்ந்து
சொற்கள் சுமந்து கவி எழுத
அழைக்கும் என் பேனா

சொல்லாத கருத்தெல்லாம்
சுமையின்றி அள்ளி
சுகமான ரணத்துடன்
சுழன்றாடும் என் வரிகள்

அமுதமாய் என் தமிழும்
வழித்திறந்த மொழியாய்
புகழ் சிறந்த இடமாய்
திகழும் விருட்சமாய்

வானமென்ன வையகமென்ன
வரித்து எடுத்து
வரிகள் கோர்த்து
விரித்து வைத்தலில்
வியக்குமா என் வரிகள்?

ஆழ்மனதில் வேரூன்றிய
கற்பனைகளோடு
களிநடனம் புரியும் கண்களும்

மோகம் கொள்ளும் என் பேனாவுடன்
எனைப் பார்த்து புன்னகைக்கும் தாளில்
புடமிடுவேன் என் கருத்தை
இயங்குவேன் கவிஞர் நெஞ்சாய்

துளிர் கொண்டு இலை கண்டு
இலை வந்து கிளை வைத்து
பூத்துக் காய்த்து கனக்கிறது
என் மனதில் அழகிய கவி வரிகள்

மௌனமாய் நானும் மூச்சு வாங்கி மூச்சு
வாங்கி
கணப்பொழுது சிந்தனைகளுடன்
கருப்பொருளில் கரைகிறேன்

தித்திக்கும் என் பேனாவும்
திகழும் என் மொழியும் நிச்சயம்
நல்நிலை அடையும்
என்றெண்ணி முயற்சியில்
மூழ்கியவளாய் இவள்


**றீனத் றாசிக்**
நிந்தவூர்.




# ஜென் கதை

இமயமலை நோக்கி பயணிக்கும் ஜென் துறவி ஒருவர் மரத்தடியில் அமர்ந்து இளைப்பாறிக் கொண்டு இருந்தார். இதை அறிந்து கொண்ட அருகாமையில் வாழும் கிராம மக்கள் துறவியின் போதனைகளைக் கேட்க நீண்ட வரிசையில் நின்று கொண்டு இருந்தனர்.

இந்த விபரம் அறிந்த உள்ளூர் செல்வந்தரும் உதவியாளருடன் துறவியை சந்திக்க வந்தவர் வரிசையில் நிற்காமல் முதல் நபராக நின்றார். இவர் தான் உயர் சாதியில் பிறந்தவர் என்றும் கிராமத்து வாசிகளை யாரையும் மதிக்காமலும் வாழ்ந்து வந்தார்.

அவரின் உதவியாளர் துறவியிடம் செல்வந்தரைப் பற்றி அறிமுக செய்து கொண்டு இருக்கும் நேரம்

துறவி அங்கு இருந்து எழுந்து வரிசையில் கடைசி நபரின் இடத்திற்கு அருகில் இருக்கும் மரத்தின் கீழ் அமர்ந்து கொண்டார். பிறகு எல்லோரையும் அவரை நோக்கித் திரும்பி சொல்லி போதனைகளை வழங்கத் தொடங்கினார். செல்வந்தர் பற்றி கிராமத்து மக்கள் மூலமாகவும் துறவி அறிந்து கொண்டார்.

கடைசி நபரான செல்வந்தர் துறவியிடம் வந்ததும்

‘இந்த பிரபஞ்சத்தில் படைக்கப்பட்ட
பட்டாம்பூச்சிகள் எல்லாம்
பட்டாம்பூச்சிகளாகவே வாழ்கின்றன
மின்மினிகள் எல்லாம்
மின்மினிகளாகவே வாழ்கின்றன‘

என்று அவரிடம் சொல்லிவிட்டு மீண்டும் பயணத்தை தொடங்கினார்.

**ஸ்ரீவி.முத்துவேல்**
சென்னை



# போதைப்பொருளிற்கு இலக்காகும் பிள்ளைச்செல்வங்களும், பெற்றோரின் வகிபாகமும்

நிலு மன்

பலவழிகளிலும்மிகப்பெரியஆபத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கும் எம் பிள்ளைகளின் எதிர்காலம் பிரதானமாக இப்போது போதை எனும் கொடிய அரக்கனிடம் சிக்கிக் கொண்டிருக்கிறது. சீருடையின் வழி, நேரசூசியின் வழி, கல்வியின் வழி அப்பாட விதானங்களின் வழி, ஒழுக்க கட்டுப்பாடுகளின்வழி எவற்றையெல்லாம் எம் பிள்ளைகளிற்கு கொடுத்துவந்தோமோ, எவற்றின்வழி அவர்களை வளர்த்தெடுத்து வந்தோமோ அவையெல்லாவற்றையும் நீர்த்துப்போக செய்யவென பாடசாலைகளில் புகுத்தப் பட்ட தேவையற்ற, பயனற்ற, முறை தவறிய, நிர்வாக,ஆளுமை திறமையற்ற, தூரநோக்கு சிந்தனையற்ற ஏற்பாடுகளும் பாதியளவில் சிதைத்துவிட மீதியை பிள்ளைகளின் பெற்றோரின் வகிபாக குறைவும் சேர்ந்து முழுமையாய் அவர்தம் வாழ்வை கேள்விக்குறியாக்கி நிற்கின்றது.



எம் பிள்ளைப்பராய காலத்தில் இருந்த கண்டிப்பின் பாதியளவுகூட இப்போது இல்லாமல் செய்யப்பட்டிருப்பதன் வினைப் பயனையே இப்போது அறுவடை செய்து கொண்டிருக்கின்றோம்.

ஒருநாள் பாடசாலைக்கு செல்லத் தவறிய வேளை நாம் தண்டிக்கப்பட்டு மீண்டுமொருமுறை அவசியமற்று விடுமுறை எடுக்காதிருந்த தன்மைக்கும் ,தற்போது ஒரு பிள்ளை பாடசாலை போகாதிருந்தால் அவனின்/அவளின் பெற்றோர் எடுத்துக் கொள்ளும் அக்கறை, அவன்/அவள் சார்ந்த பாடசாலை எடுத்துக்கொள்ளும் அக்கறை இவற்றிடை யேயான வேறுபாடே பிள்ளையின் எதிர்காலம் அவனைவிட்டு எவ்வளவு தூரம் தள்ளியிருக்கிறது என்பதை புரிந்துகொள்ள போதுமாயிருக்கிறது.

தொழிநுட்பங்களின் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க வேண்டிய கட்டாயம் எல்லா தரப்பினரையும் கணிசமானளவு பாதிக்கத் தொடங்கிய காலத்திலிருந்து இந்த ஆபத்தும் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறது.

மூன்றுவேளை உணவற்ற வீட்டிலும் கைத்தொலைபேசி அனாவசியமாக கட்டாயப் படுத்தப்பட்டிருக்கும் சூழலில் இதன் பாதகவிளைவுகள் அதிகரிக்கின்றது.

புரிந்துகொள்ளப்படாத வயதில் பிள்ளைக்கு கட்புலனாகும் விடயங்கள் தொடர்பில் அவனிற்கு எழும் ஆர்வம் தவறான பழக்கங்களின் தூண்டுதலிற்கு

காரணமாகிறது.

எனது மகன் கைத்தொலைபேசியை சாமர்த்தியமாக இயக்குவதில் கைதேர்ந்து வருகிறான் என பெருமைகொள்ளும் ஒரு வறுமைவீட்டின் தகப்பனிற்கோ/ தாயிற்கோ அதன்வழி அவன் அடையப் போகும் ஆபத்துகள் பற்றி தெரிய வாய்ப்பில்லை. இறுதியில் அவன் தவறான நடத்தைகள்வழி அவை வெளிப் படுகையில் வருந்துவதில் பயனுமில்லை.

சமூகம் சார்ந்து எழும் போட்டிச் சூழலில் சிக்கித்தவிக்கும் பல பெற்றோர் களை இன்று நாம் காண்கின் றோம். தனது அயல்வீட்டுக்காரரின் மகன் படிக்கும் அதே பாடசாலையில், அதே தனியார் வகுப்பில் தன் மகனும் படிப்பதே கௌரவம் என கருதும் மனநிலையில் தத்தம் கஷ்டங்களையும் மறைத்து, மேலதிக உழைப்பில் உடலையும் வருத்தி பிள்ளையை அங்கு சேர்த்துவிட்டால் போதும் என நினைக்கும் ஒரு பெற்றோர் பிள்ளையின் கல்வி அடைவுமட்டத்தில் எவ்வித கவனத்தையும் கொள்வதில்லை அதற்கு அவர்களிற்கு நேரமும் வாய்ப்ப தில்லை.

ஒரு பிள்ளை என்றால் மிகையான கவனிப்பை நிகழ்த்தி பிள்ளையை சவால் களிற்கு முகங்கொடுக்க முடியாமல் திணறும் தன்மைக்கு ஆளாக்கும் பெற்றோர் களையும் நாம் அன்றாடம் பார்க்கின்றோம்.

இரத்த சொந்தங்கள் வெளிநாட்டி லிருந்து அனுப்பும் பணத்தினை பெருவாரி யாக செலவுசெய்து தேவையற்ற, தவறான வழிக்கு செல்லும் வாய்ப்புகளை எல்லா வசதிகளின் வழியேயும் ஏற்படுத்திக் கொடுத்து விட்டு இறுதியில் பிள்ளையின் எதிர்காலம் குறித்து கலங்கும் எண்ணற்ற பெற்றோர் களையும் நாம் சந்திக்கின்றோம். வீட்டிலும் சரி, வெளியிடங்களிலும் சரி தம் பிள்ளைகளை தனியாக இருக்க நீண்ட நேரம் சந்தர்ப்பம் அளித்து, நேரமற்று ஓடிக்கொண்டிருக்கும் எத்தனையோ பெற் றோர்களையும் நாம் காண்கின்றோம். இதில் பேரவலம் என்னவென்றால் பெரும்பாலும் அதில் மெத்தப்படித்த மேதாவிகள், பேராசி ரியர்கள், பெரும் பதவிகளில் இருப்பவர் களும் இதே வகையினராக இருப்பது தான். பிள்ளை தனியாக இருக்கும் சந்தர்ப்பங்களை எப்போதும் தனக்கு சாதகமாக்கவே முயற்சிக்கும். சரியான வளர்ப்பும் வழிகாட்டலும், கண்டிப்புமற்ற பிள்ளை தவறான போதை பழக்கங்களிற்கு வழிமாறுவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகின்றது. பத்திரிகைகள், ஏனைய ஊடகங்கள் வழி தினமும் வரும் செய்திகள் எங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் இன்னும் அச்சங்கொள்ள வைக்கின்றன.

சரியான சட்ட வரையறைகளும், முறையான நீதியும் கிடைக்காதவரை போதை தாராளமாக புழக்கத்திலிருக்கத் தான் போகின்றது.

அவை தொடர்பில் விழிப்புணர்வாக எப்போதும் இருப்பதுடன், கிடைக்கும் வழிகள் மட்டில் அவதானமும், எமது பிள்ளைகள் மட்டில் தொடர்ச்சியான கண்காணிப்பும் அவசியமாகின்றது. என்றைக்கு பெற்றோர் தம்பிள்ளைகள் மட்டில் தமக்குள்ள பொறுப்பை சரிவர உணர்ந்து பிள்ளை வளர்ப்பை ஆரம்பம் முதலே சரிவர கைக்கொண்டு சவால்களிற்கு முகங்கொண்டுக்கும், தீர்க்கமான முடிவெடுக்கும் திறன்களை எதிர்காலத்தில் கைக்கொள்ளும் பிள்ளைகளை வளர்க்க முற்படுகிறார்களோ அப்போதுதான் அவர்தம் பிள்ளைகளின் வாழ்வும் சீராகும், சிறப்பாகும்.

சிந்திப்போம் செயற்படுவோம். மாற்றம் நம்மிலிருந்தே தொடங்கட்டும். பிள்ளைகள் நல்ல மாற்றத்தை நாளை காண்பார்கள்.

# தன்முனைக்கவிதைகள்

அடுத்தவன் பொருளில்
ஆசை கொள்ளாதே
அதைப் பிடுங்கி
அசிங்கமாய் வாழாதே

----

கிலோ என்ன விலை
கேட்கும் மனிதர்
நிறுத்து விற்கவோ
நீதியும் நியாயமும்

----

பேச்சு தோறும்
பூக்கள் மணக்கும்
நெஞ்சம் எல்லாம்
புலால் வீச்சம்

----

குழி பறித்து
கோபுரம் எழுப்புவார்
வழி தெரியாதார்
விழுந்தே தொலைப்பார்

----

முலாமிட்ட முகங்காட்டி
முகமன் கூறுவார்
சலாம் போட்டபடியே
சகலதையும் சாதிப்பார்

----

வருணனையில் வாழ்த்தியே
வாகாய் வரவேற்பர்
கருணையின்றிப் பிடுங்கியபின்
போவென்றே இழிந்துரைப்பர்

----

ஏமாந்த பின்னர்
ஏது பலன்?
ஈனத்தனம் அறிந்து
இருந்திடுவாய் சூதானமாய்

----

சந்து பொந்தெல்லாம்
அதிகாரிக்கும் வேட்டை
சிந்து பாடித்திரியும்
பச்சோந்திகள் கூட்டம்

----

முட்டாள் என்றும்
முட்டாள் அல்ல
தட்டிக்கேட்க ஒருநாள்
தைரியமும் வரும்

----

ஏமாந்த பின்னர்
எழும் உறைப்பு
எட்டிக் காயெனவே
உள்வரும் கசப்பு

----

இலாப நோக்கத்தில்
எதையும் செய்யாதே
இறைவழியில் என்றும்
இணைந்தே வாழ்

----

உடல் பொருள் ஆவி
அவனுக்கென்று ஆனபிறகு
உள்ளத்தில் கலக்கம்
உருவாவதும் ஏனோ?

----

தெள்ளத்தெளிவாய்
தேட்டத்தில் மூழ்குவாய்
அள்ளக் குறையாத
அருளினைப் பெறுவாய்

----

ஏமாறுவதும் இழிவடைதும்
இவ்வுலகில் மட்டும்தான்
ஏகனின் நீதிப்பட்டயம்
ஏகுமுலகில் மகிழ்வாய்

----

Dr ஜலீலா முஸம்மில் (ஏறாவூர்)
ஆதார வைத்தியசாலை ஏறாவூர் இலங்கை



# இது நம்மவர் படைப்பு




மதிசுதாவின் ஈழத்தின் அடையாளம் தரித்த அற்புதமான திரைப்படைப்பு 'ஈழத்தின் வெந்து தணிந்தது காடு'.

அந்த காலத்தில் வாழ்ந்தோம் என்று சொல்லிக்கொண்டிருந்த எம்மை மீண்டும் அந்த காலத்திற்கு அழைத்து சென்றிருக்கிறது - அழவைத்தும் வென்றி ருக்கிறது.

எங்கள் கதைகளை எங்களைவிட எவராலும் சரிவர தர இயலாது என்பதன் மிகப்பெரும் சாட்சியாய் இது இருக்கின்றது.

மீண்டுமொரு போர் வேண்டாம் என்பதை ஏன் எங்களால் இன்னமும் சொல்லிக் கொண்டிருக்க முடிகிறது என்பதை திரையில் பார்க்கும் அனைவரும் நிச்சயம் உணர்வார்கள்.

அத்தனை இயல்பான தன்மைகளோடு பாத்திரங்கள் எல்லோரும் வாழ்ந்து அன்றைய வாழ்வை மீளவும் நமக்குள் சேர்த்திருக்கிறார்கள்.

இறுதிப்போரின் அவலங்கள் எடுத்தாளப் பட்டிருக்கும் விதம் நிச்சயம் பார்ப்போரை உருகச்செய்துவிடும்.

எவர் பக்கம் நியாயம் இருக்கிறது என்பதை முடிவு செய்யமுன்னமே போர் எவரையும் மீதமின்றி தின்றுவிடும் - மனிதர் தம் நல்வாழ்வை அது வென்று விடும்.

ஒரு கூட்டுக் குடும்பத்தினை காட்சிக் குள் தந்து அதன்வழி போரின் யதார்த்தம் உணர இயக்குனர் எடுத்த முயற்சி நிச்சயம் பாராட்டிற்குரியது. ஆலமரமாய் தாங்கும் ஒரு அன்னை. அவளைச்சுற்றி அவளின் மகவுகள், வாழ்வின் நீட்சியில் அவர்களோடும், அவர்கள் வழியே வந்த உறவுகளோடும் போரின் நடுவே ஒரு போராட்டத்தின் பயணம் இது கதை நகரும் தளம். இதில் என்ன இருந்துவிடப்போகிறது என்பதை திரையில் விருந்தாக்கி திகட்டாது தந்திருக்கிறது - ஈழத்தின் வெந்து தணிந்தது காடு.

போரோடு போராடும் மக்கள் தம் வாழ்வில் அனுபவித்தவற்றை தற்கால மற்றும் வரும் தலைமுறைக்கு காட்சிகள்வழி கடத்துவதில் இம்மியும் பிசகாது வென்றுவிடுகிறது இந்த படைப்பு.

புக்காராவிற்கு பதுக்கும் பங்கர் வாழ்வு, புகைசூழ் காற்று, புழுதி குடிக்கும் தேகம், புண்வந்த கைகால்கள், அகப்பட்ட வற்றிலிருந்து சமைக்கப்படும் ஆகாரம், அடுத்த வேளை அதை உண்ண ஆளில்லாத

சோகம் அத்தனை இடர்களிற்குள்ளும் வாழ்வை தொடங்கவும், தொடரவும், முடிக்கவும் துணைவரும் தூய காதல், பாசம், உறவுகளின் பிணைப்பு இவற்றோடு இயங்கும் வாழ்வு போர் தந்த இழப்பில் கலங்கி மயங்கும் போது, அகிலமே சூனியமாகிப் போன ஒற்றை பங்கர் என்றாகிவிடுகிறது.

போர் கொடிதினும் கொடிது; முடித்திட முடியுமானவரை முயற்சியுங்கள் என்று உலகத்திற்கான செய்தியும் ஈழத்தின் வெந்து தணிந்த காட்டில் இருந்து சொல்லப்பட்டிருக்கிறது.

குறும்படங்களின் வழி ஈழத்தில் தன்னை ஓர் தனித்துவ படைப்பாளியாய் நிலைநிறுத்திக்கொண்ட மதிசுதாவின் மற்றுமொரு காத்திரமான முழுநீள கலைப் படைப்பு இது.

Crowd funding முறையில் இலங்கையில் முன்னெடுக்கப் பட்ட ஒரு கூட்டுத் தயாரிப்பு முயற்சியின் பலன் இத்தகு தரமாய் வந்திருப்பதுடன், ஈழசினிமாவை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லவல்ல உந்துதலையும் சேர்த்தே தந்திருப்பது பெருமகிழ்சியை உணரச் செய்கிறது.

ஆர்.ஜே.பிரகலாதன்.

# பிறிதோர் தேசத்தில்

பிழைப்பு தேடி பிறிதோர் தேசத்தில்
உழைப்பை விற்றுப் பணமாக்கி
தன் குலத்திற்கு செலவிடும்
மானிடரும் வாழ்கின்றார் வாழ்வை

நன்னாட்கள் எல்லாம்
வெறுமனே புகைப்படங்களாய்
உயிரில்லாக் காணொளிகளாய்
மட்டுமே கடல் தாண்டின

தலைவலியில் துடித்தாலும்
மனைவி மக்கள் பக்கமில்லை
ஆறுதல் வார்த்தைகள் மட்டும்
தொலைபேசி அலைகளினூடு

மழலையின் முத்தம் ஈரமில்லை
மனைவியின் தழுவலும் ஸ்பரிசமில்லை

தொலைபேசி அலைகளால்
கடலைக் கடக்கவும் முடியாது
உணர்வுகளை சேர்க்கவும் இயலாது
குறுஞ்செய்தி எழுத்துக்களுக்கு உயிரில்லை

பணம் மட்டும் வாழ்வில்லையெனில்
கால்கள் கடலைக் கடந்திருக்காது
உணர்வுகள் அனைத்தும் சங்கமமாகிப்
போயிருக்கும் நேருக்கு நேராய்

எப்.ஹகீமா நசீர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

# அண்ணா

உறவுகள் பல உலகிலே இருக்கையில் - எனை
உயிராய் தன் வாழ்விலே சேர்த்தவன்
சிறைகள் எனை அடைக்கும் போது - என்
சிறகாய் தன்னை செதுக்கியவன்
சாதனை சோதனையாய் வேதனையாக்கும் போது - என்
சுமைகளை சுகமாய் சமமாக்கியவன்

வற்றாத நதியைப்போல் நீ - என்னை
வம்புக்கிழுக்காத நாளே இல்லை
எல்லாத்திற்கும் உன்னிடம் சண்டைபோட - நீ
எனக்காக எல்லாரிடமும் சண்டைபோடுவாய்
யாரிடமும் எனை விட்டுக்கொடுக்காதவன் - நீ
யாதாயினும் எனக்காக விட்டுக்கொடுப்பாய்

அன்பில் அன்னையாய் அரவணைக்கும் தந்தையாய்
உயிருள்ளவரை உள்ளத்தால் உடன் நிற்குமுறவாய்
அண்ணனெனும் வார்த்தையாய்
என் வாழ்க்கையை அழகாக்கினாய்
எழுந்தநல் கருத்தையின்று கவிதையாய் எழுதினேன்

பூக்கும் ரோஜாவாய் நானிருக்க
அதைக்காக்கும் முள்ளாய் அண்ணா.

**கொ.ஜெனிபர்.**
தரம் 10.
யா / வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

# இயற்கையோடு அவளும்

*உன் விழிப்பறவை*
*இரையாய் கொத்துகிறது*
*என்னை.*

*கடைசியொரு*
*படி மட்டுமே பாக்கியான*
*நிலையில்*
*முகட்டில் விழுந்துவிட்டது*
*அந்திச்சூரியன்.*
*அவ்வொரு*
*படியைக் கடந்திருந்தால்*
*மாடியேறி இறங்கிய*
*மகிழ்ச்சியில் திளைத்திருக்கும்*
*பக்கத்து வீட்டு*
*குடிசையின் நிழல்.*

*குழந்தைமனம் கொண்டிருப்பின்*
*எதிலும் எங்கும் எப்போதும்*
*தொலையலாம்.*
*அம்மனம் தொலைந்தபோது*
*தொலைதலென்பது சிரமம்.*

*நீ நிலவைப் பிடித்து வா*
*நான் இரவைப் எடுத்து*
*வருகிறேன்.*
*கனவில் இருவரும் இணைந்து*
*காதலில் திளைப்போம்.*

*ஜன்னலைத் திறந்தேன்*
*காற்றோடு நிலவு வர!*
*வாசலைத் திறந்தேன்*
*காதலோடு அவள் வர!*

*செங்காந்தள்மலர்*
*அவள் முகம்*
*அதில் சுழலும்*
*கருவிழிரெண்டும்*
*வண்டினம்.*

*என்னவளின் கூந்தல்*
*வண்ணத்திகள்*
*வலம் வரும் பூக்காடு.*

*கால்களில் ஜோடியாய்*
*பயணிக்கும் செருப்புகள்*
*இணையாத் தண்டவாளங்கள்.*

*சத்தமில்லா*
*மௌனமுத்தத்தை*
*யான் எங்ஙனம் பதிப்பேன்!*

*ஒவ்வொரு மழைத்துளிக்கும்*
*தாளத்தை தப்பாமல்*
*தருகிறது பூமி.*

*பகல் நேரத்தில்*
*பகலவன் தோளிலும்*
*இரவுப் பொழுதில்*
*அம்புலியின் சிரசிலும்*
*ஆகாயம்!!*

*கரையில் நின்று கடலை*
*வேடிக்கைப் பார்க்கும்*
*பிள்ளையின்*
*கால்களைத் தழுவி*
*மகிழ்ந்திட அழைக்கிறது*
*அலைகள்.*

நதியைத் தேடிவந்த
கடலினால் சுயத்தை
இழந்திருந்தது நதி.

என் வீட்டு நிலைக்கண்ணாடியில்
தன்பிம்பத்தை பார்த்தவாறு
அளவளாவிக் கொண்டிருக்கிறது
வெகுநேரமாய் ஒரு
சிட்டுக்குருவி.

கதை சொல்லத் தொடங்கிய
சில நிமிடங்களில்;
அவள் உறங்கிப்போனாள்.
விடியவிடிய கதை கேட்டு
இம்சிக்கிறது இரவு.

கலப்படமற்ற திராவகத்தை
எந்நேரமும் விழிகளில் நிரப்பி
வைத்திருக்குமவளை
பேரழகியென்றே
நான் சொல்லிக் கொள்கிறேன்.

உயிரை
பறிக்கத் துடிக்கும் காற்றுக்கு
ஆயுள் ஆயிரமாயிரம்.

கிளைகளின் விளிம்பில்
ஒட்டிக்கிடக்கும்
சில சருகுகளுக்கெனவும்
ஓயாமல் வீசுகிறது காற்று.

விடுமுறையில்
ஒன்றுகூடிய பிள்ளைகள்
விளையாட்டில் வெறும்
சேற்றைக் குழைத்து
சமைக்கிறார்கள் கறிச்சோறு.

முதல்வரியும் கடைசிவரியும்
அவளிதழ் பார்த்து
எழுதிவிட்டேன்.
இடையிலொருவரி சேர்த்தால்
ஹைக்கூ ஆகுமென்றேன்
புன்னகைக்கிறாள்.

நட்சத்திரங்களோடு
பேசிக் கொண்டிருந்தேன்.
நிலா குறுக்கிட்டதும்
மௌனமாய்
விலகிக் கொண்டன
நட்சத்திரங்கள்...!

- பாரியன்பன் நாகராஜன்




# மங்கையரே மகிழ்வீர்

கருவறையில் சுமந்து
களிகொண்டு காத்திடுவாள்
காலம் முழுவதும் பிள்ளையினை
கலங்கிடாது வளர்த்திடுவாள்

தன் கணவன் குணம் கண்டு
தக்க பணி செய்திடுவாள்
கணவன் பிரிவில் கூட
கண்மணியாய் பிள்ளைகளைக் காத்திடுவாள்

காலங்களோடு பல பாத்திரங்கள்
கச்சிதமாய் ஏற்று வாழ்ந்திடுவாள்
காகித ஓடமாய் தள்ளாடும்
கன்னியர் வாழ்வு சோகத்தோடு...

புகுந்த வீட்டில் பல நிறங்கள்
பூக்கும் புதுமை எண்ணங்கள்
அத்தனையும் தனக்குள் அடக்கி
அடக்கமாய் கடமையதை செய்திடுவாள்

ஆணின் பின்னால் பெண்ணாக
அக்கறையுடன் பாடுபடு வாள்
தாயாய் தாரமாய் மகளாய்
தரணி உள்ளவரை வருவாள்

மங்கையரே உங்கள் பணி
மரணம் வரை நீடிக்கும்
ஆணுக்கு நிகராய் ஆதிக்கம் செலுத்தும்
ஆளுமைகளை சுமந்தவள் நீ

அடக்கு முறைமைக்குள் புகுந்து
அடங்கி ஒழிந்து மறையாதே
அடக்கத்துடன் அகிலங்காண்
ஆவதும் பெண்ணால் என்றாகு

புரிதலில் புகுந்து பூத்திடு
புது யுகம் காணலாம் மலர்ந்திடு
உலக சாதனைகளை தனதாக்கு
உனக்குள் இருப்பதை வெளியாக்கு

துணிந்து நீயும் வாழ்ந்திடு
தணிந்து போவதில் நிதானித்திடு
காலம் கைகோர்க்க காத்திருக்கு
கரை கண்டு பெண்ணே உயர்ந்திடு

எஸ்.யூ. கமர்ஜான்பீபீ (J.P)





# வித்தியாசமான ஊர்

இறந்தவர்களைச் சிரித்த முகத்துடன் அடக்கம் செய்யும் மக்கள்! - புதுக்கோட்டையில் ஓர் அதிசய கிராமம். சாதி, மத பேதமில்லாத 'மெய்வழிச்சாலை' அதிசயகிராமம்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா. இங்கு சாதி, மத பேதம் யாரும் பார்ப்பதில்லை. கீரியும், பாம்புமாக எப்போதும் மோதிக் கொள்ளும் சாதிக்காரர்கள் இங்கு அண்ணனும், தம்பியுமாக, மாமனும் மச்சானாக, பொண்ணு கொடுத்து, பொண்ணு எடுத்து ஒன்றுகூடி வாழ்ந்து வருகின்றனர். புதுக்கோட்டை அருகே சித்தண்ணவாசலுக்கு பக்கத்தில் இருக்கிறது மெய்வழிச்சாலை கிராமம்.

இந்தக் கிராமத்தில்தான் பல் வேறு ஆச்சர்யங்கள் கொட்டிக்கிடக்கின்றன. கிராமத்துக்குள் நுழைந்தவுடன் பெரிய வாயிற் கதவு நம்மை வரவேற்கும். மெய்வழிச்சாலைக்குள் வெளியூர்க்காரர்கள் அவ்வளவு எளிதில் சென்றுவிட முடியாது. கிராமத்துப் பெரியவர்களின், கேள்விகளுக்குச் சரி யான பதிலைக் கூறி, அதில் தேர்ச்சி அடைந்தால் மட்டுமே கிராமத்துக்கு உள்ளே செல்ல முடியும்.

பணம் அதிகமாக இருந்தாலும், எந்த ஆடம்பரத்துக்கும் இவர்கள் இடம் கொடுப்பதில்லை. கிராமம் முழு வதும் எங்கும் நேர்த்தியான கூரைக் குடில்கள். வீடுகளில் மின்சார வெளிச்சம் கிடையாது. அனை வரும் மெய்வழி மதத்தைக் கடைப்பிடிக்கின்றனர். சிறுவர்கள் தொடங்கி முதியவர்கள் வரையிலும் அனைத்து தரப்பினரும் தலையில் எந்த நேரமும் வெள்ளை

டர்பன் அணிந்திருக்கின்றனர். தலையில் டர்பன் அணியாமல் மறந்தும் இருப்பதில்லை. மெய்வழி மதத்தைத் தலைமுறை தலைமுறைகளாகக் கடைப் பிடிக்கின்றனர்.

மெய்வழி மதத்தைப் பின்பற்றும் எந்தச் சமூகத்தினராக இருந்தாலும் அவர்களை தங்களோடு சேர்த்துக் கொள்கிறார்கள். இங்கு பசுமை போர்த்திய மரங்களுக்கு நடுவே பொன்னு ரங்க தேவாலயம் இருக்கிறது. இன்றளவும், இங்குள்ள ஆண்டவர் மேல் நம்பிக்கை வைத்து வெளியூரில் இருந்து பலரும் மெய்வழிச் சாலையை நாடி வருவதாகவும் கூறுகின்றனர்.

ஆண்களுக்கு, இணையாகப் பெண்கள் இங்கு நடத்தப்படுவதுதான் கூடுதல் ஆச்சர்யம். குறிப்பாக, மனிதனாகப் பிறந்த எல்லாருக்கும் இறப்புக்குப் பிறகு மறுபிறப்பு இருக்கிறது என்று தீர்க்கமாக இவர்கள் நம்புகின்றனர். அதனால்தான் இவர்கள் குடும்பத்தில் யார் இறந்து போனாலும், அழுவதே இல்லை. இடுகாடு வரையிலும் சென்று இறந்தவர்களைச் சிரித்த முகத்துடன் அடக்கம் செய்துவிட்டு வந்து விடுகின்றனர். கணவனை இழந்த பெண்களும் இதற்கு விதிவிலக்கு இல்லை. கணவனை இழந்த பெண்கள் தாலியைக் கழட்டுவதில்லை. பூ பொட்டு வைத்துக்கொள்கின்றனர். கணவன் இறந்த பிறகும் இந்த ஊர் பெண்கள் தீர்க்கசுமங்கலியாகவே வாழ்கின்றனர்.

**ப்ரியா தமிழச்சி**



## இளநீர் மில்க் ஷேக்

தேவையானவை
பதமான இளநீர் 2
பால் 400 மி.லி
சீனி சுவைக்கேற்ப
வெனிலா ஐஸ்க்ரீம் 2-4 ஸ்கூப்

செய்முறை :
இளநீர், அதன் உள்ளிருக்கும் வெண்பகுதி, பால், சீனி, ஐஸ்க்ரீம் சேர்த்து மிக்ஸியில் அரைத்தெடுக்கவும். அதனுடன் ஐஸ்கட்டி சேர்த்து பரிமாறலாம். இலகுவாக செய்யக் கூடிய இந்த குளிர்பானம் சுவை மிகுந்தது.

# கிராமத்து இனிமைகள்

இயற்கை யின்பம் இதமிகு சுகமே
தயக்கமே யில்லாத் தமர்நிறை வாழ்வு
வளைந்து நெளியும் வனப்புமிகு பாதைகள்
களைப்பைப் போக்கும் காற்றின் சுவாசம்
செவிக்கு ணவாகும் சிற்றுயிர்களின் கீதம்
தவிப்பில்லா வெப்பமில்லா தளிரான வாழ்வியல்
பண்பாடும் கலாசாரமும் பறைசாற்றி நிற்க
கூட்டுக் குடும்பமது கனிந்து குழைய
வஞ்சமறியா மனங்கள் வனப்புநிறை தொடர்பாடல்
எஞ்சியே நிற்கும் எளிமையும் மகிழ்வும்
தஞ்ச மாகும் தாராள கொடைகள்
தெளிந்தே ஓடும் தெளிவான நீரோடைகள்
ஒட்டி உலரா ஒய்யார வீடுகள்
பரந்து விரிந்த மரங்களின் நிழலில்
பசுமை விரிப்புகள் பழமையை எடுத்தியம்ப
பலநிலைச் செயல்கள் பண்பாட்டின் கூறுகளாய்
வழமையின் வரிசையில் வகையுறும் அழகியல்
உதவிடும் பண்பும் ஒற்றுமை நலனும்
மாம்பூ வேப்பம்பூ நறுமணமாய் வீச
மாலைக் காற்றும் மனத்தை மயக்க
தாவணிக் கனவுகளில் தாளலய மிசைக்கும் காதலும்
பாவமில்லாப் பண்புகளும் பரவசமும் பட்டாடை விரிக்க
திண்ணை சொல்லுமே தீந்தமிழுறவின் மேன்மையை
கன்னமிட்ட காதலின் சுகமான இனிமையை
ஒருங்கே பெற்ற கிராமத்து இனிமைகள்
எழிலாகும் காட்சிகள் என்றும் இனிமைகளே

உடுவிலூர் கலா


MUTUR JMI
PUBLICATION
jmi
MUTUR
Offset Printing & Photocopy Services
MINIMUM QUANTITY
100
40% OFF
Island Wide Delivery Available
Past Papers | Teachers Guide | Notes | Project Research Papers | Assignment | Term Test Papers | Tution Class Tutes | Online Class Notes | Subject Books Pdf files and etc
FREE DELIVERY
Off-Set Printing
BOOK BINDING
PRINTING
Offset Printing
Four Color to One Color
70 - 250 GSM Papers
A5, A4, A3, Offset Printing
Photocopy & Duplo
Typing & Layouts
Cover Design
Visiting Card
A4 - 5.50
A3 - 12.50
Book Binding
Perfect & Hard Binding
Book Publication
Glossy & Mett Lamination
60 - 80 Gsm Papers
Magazine, Book, Project
Instalment Payment Available
A4 - 5.40
A3 - 12.20
B5 - 10.00
Color Printing
Four Color (Inject & Laser)
70 - 250 GSM Board & Papers
A5, A4, A3, B5, Color Printing
Certificate & Photos
Layouts & Designing
Art Paper, Photo Board, Sticker, Ivory Board, and Etc
A4 - 40.00
A3 - 100.00
Mutur JMI
Contact Now
+94 77 1020030
+94 71 789 1887
Our Office
Bazar Mosque Road
Mutur - 04, Trincomalee
More Information
www.mutur-jmi.com
muturjmi@gmail.com